1993 டிசம்பர் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 89, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் :

89—

வெள்ளோட்டாம்பரப்பு கிராமத்திற்கு கால்நடை மருத்துவ வசதி.

*19499—திருமதி கவிநிலவு தர்மராஜ் :

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், வெள்ளோட்டாம்பரப்பு கிராமத்தில் கால்நடை மருத்துவ வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வெள்ளோட்டாம்பரப்பு கிராமத்தில் புதிதாக ஒரு கால்நடை மருந்தகம் துவக்க அரசு இசைவு வழங்கி அங்கு கால்நடை மருந்தகம் துவக்கப்பட்டு 1—9—1989 முதல் செயல்பட்டு வருகிறது.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகம் என்று பெயர் அளவிலே கொடுமுடி ஒன்றியத்திலே ஒரு மருந்தகம் 1989-லே ஏற்படுத்தப்பட்டதே தவிர, அதனால் பயன்பட்ட கால்நடைகள் எத்தனை என்பதும், அந்த மருத்துவர் அந்த கால்நடை மருத்துவமனைக்கு வந்து மருந்துகளை விநியோகம் செய்கிறாரா என்பது குறித்து தொகுதி மக்களிடையே ஒரு கருத்து மாறுபாடு இருக்கிறது. மருத்துவமனை என்ற பெயர் அளவிலே இருக்கிற அந்தக் கட்டிடத்தில் மருத்துவர் வருவதும் இல்லை, மருந்துகள் விநியோகப்படுத்தப்படுவதும் இல்லை. வெள்ளோட்டாம்பரப்பு கொடுமுடியினுடைய நடுநாயகமாக விளங்கிக்கொண்டிருக்கக்கூடிய ஒரு பேரூராட்சி, அதிகமான கால்நடைகளை கொண்டிருக்கிற பேரூராட்சி, அதனால்தான் இந்த மருத்துவ வசதி வேண்டுமென்ற அளவிலே நாங்கள் வினாக்களை வைத்திருக்கிறோம். இதைப் பொறுத்தவரை மருந்தகம் என்ற அளவில் 1989-ல் திறப்பு விழாவை மட்டும் நடத்திவிட்டு அப்போதைய அரசு ஒரு கண்துடைப்பு வேலையை செய்

இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு இதய்தெய்வம் அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, அந்த மருந்தகத்திலே முறையாக மருந்துகள் விநியோகிக்கப்படுகிறதா, இனிமேலாவது சரிவர ஆயிரக்கணக்கான கால்நடைகளை கொண்டிருக்கிற வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சியினுடைய கால்நடைகள் முறையாக பராமரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1–9–1989-லிருந்து செயல்பட்டு வருகிறது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் கூறிய குற்றச்சாட்டுகளைப் பரிசீலித்து அப்படிக் குறைகள் இருக்குமானால் களைய ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 90, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

90—

உணவு வகைகளுக்கு விதிக்கும் விற்பனை வரியை நீக்குதல்.

* 11557—திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவு வகைகளுக்கு விதிக்கும் 5 சதவிகித விற்பனை வரியை நீக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிக வரிகள் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): உணவுப்பண்டங்களுக்கு தற்போது இருக்கும் 5 சதவீத விற்பனை வரியை குறைக்கும் உத்தேசம் அரசுக்கு தற்போது இல்லை. அதனால் மேற்கொண்டு விவரம் ஏதும் இல்லை.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஓட்டல் பண்டங்களின் விலை கடுமையாக உயர்ந்திருக்கிறது. சாதாரண இட்லி விலை 1.50 என்ற அளவிற்கு விற்கிறது. சாதாரண மக்கள், ஓட்டல் பண்டங்களை